# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.82/2025

**Deposition of Witness for Prosecution PW 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சின்னையன் | Father's Name | : | கிருஷ்ணன் |
| Village | : | வடக்குபட்டம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 65 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 03rd day of November 2025.**

**(A2 to A4 present. A1 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்குபட்டத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 என் பக்கத்து வீட்டை சேர்ந்தவர். சுமார் 7 வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு மாரியப்பன் வீட்டிற்கு அருகில் ஒரே கூட்டமாக இருந்தது. யாரோ மாரியப்பனை அடித்துவிட்டார்கள், அப்போது எனக்கும் காயம் ஏற்பட்டது. என்னை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.03 14:35:21 +0530

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 05.04.2017 ம் தேதி பெரியசாமி சகளை மகள் சீத்தளாதேவி மகாதேவன் மீது ஹரித்துவாரமங்களம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த வழக்கு நீடாமங்கலம் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது எனவும் 19.05.2017 ம் தேதி இரவு 8.00 மணிக்கு மாரியப்பன் அவரது குடும்பத்தினரும் வீட்டில் இருந்தார்கள் எனவும் அப்போது எங்கள் தெருவை சேர்ந்த கருப்பையன் சகளை பெரியசாமி, சதாசிவம் மகன் சரவணேஷ், ராமதாஸ் மகன் மனோரஞ்சன், பன்னீர்செல்வம் மகன் அறிவழகன் ஆகியோர் கையில் அருவாள் மற்றும் கட்டைகளுடன் மாரியப்பன் வீட்டு வாசலுக்கு வந்து ஏன்டா தேவடியா, குச்சிகாரி மகன்களா கருப்பையன் மகள் சீத்தளாதேவிகிட்ட தகராறு செய்துவிட்டு அப்பனும் மகனும் ஜாலியா இருக்கீங்களா என சொல்லி சரவணேசும் அறிவழகனும் தங்கள் கையில் வைத்திருந்த அரிவாளால் மாரியப்பனின் இடது பக்க தலையில் சரவணேஷ் வெட்டினான் எனவும் மனோரஞ்சனும் பெரியசாமியும் தாங்கள் வைத்திருந்த கட்டையால் மாரியப்பனின் இடது கை மற்றும் வலது

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.03 14:35:32 +0530

கால் ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்தார்கள் எனவும் அவர்கள் வெட்டியதில் மாரியப்பனின் தலையிலிருந்து இரத்தம் கொட்டியது எனவும் இதை பார்த்த மகாதேவன் ஏன்டா இப்படி செய்றீங்க என கேட்டதற்கு அறிவழகன் தான் வைத்திருந்த அரிவாளால் மகாதேவனை வலதுபக்க தலையில் வெட்டினான் எனவும் அதில் மகாதேவனுக்கு தலையிலிருந்து இரத்தம் கொட்டியது எனவும் அதை தடுக்க வந்த என்னை பெரியசாமி தன் கையில் வைத்திருந்த கட்டையால் உச்சி மண்டையில் ஓங்கி அடித்ததில் என் மண்டை உடைந்தது எனவும் உடனே 4 பேரும் எனது வீட்டை தீ வைத்து கொளுத்தினார்கள் எனவும் வீடு எரிந்ததை பார்த்த அக்கம் பக்கத்தினர் ஓடிவந்தார்கள் எனவும் அவர்களை பார்த்ததும் கையில் வைத்திருந்த அரிவாள் மற்றும் கட்டையை காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி சென்றார்கள் எனவும் எங்கள் ஊர் தியாகராஜன் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து எங்கள் மூவரையும் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் எனவும் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.03 14:35:39 +0530

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.03 14:35:45 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.